1995 நவம்பர் 7]

அதைத் தீர்ப்பது போல, கூட்டுறவுத் துறையின் மூலமும் மக்களின் குறைகள் கேட்கப்படுகின்றதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். எந்தத் துறையிலும் குறையே இருக்கக் கூடாது என்று நினைக்கிற நித்தில தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்பு, கூட்டுறவுத் துறையிலே கூட, மக்கள் குறைகளைக் கேட்க வேண்டுமென்று ஒவ்வொரு மாதமும் இரண்டாவது திங்கள் கிழமையன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டிடங்களில் பிற்பகல் 2-30 மணிக்கு மத்திய கூட்டுறவு வங்கித் தலைவரும், தனி அதிகாரிகளும், மண்டல இணைப் பதிவாளரும், மொத்த பண்டக விற்பனைசாலையினுடைய தனி அதிகாரிகளும் அமர்ந்து, கூட்டுறவுத் துறையிலே பணியாளர்கள் ஆனாலும் கூட்டுறவு சங்கத்தினுடைய உறுப்பினர்கள் ஆனாலும், கூட்டுறவுத் துறையிலே இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று எண்ணுகிற பொதுமக்கள் ஆனாலும், அவர்களுடைய மனுக்களைப் பெற்று அந்த மனுக்கள் மூலமாக பல்வேறு குறைகள் தீர்க்கப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37, திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திருமதி ஏ. எஸ். பொன்னமாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

37—

ஊராட்சி மட்டக் குழுவின் பணிகள்.

***10518**—திரு. எம். ஆண்டி அம்பலம்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி மட்டத்தில் உருவாக்கப்பட்ட குழுவின் (Task Force) பணிகள் பற்றிய விவரம் என்ன?

(ஆ) அந்த குழுவில் உள்ள அரசு அதிகாரிகளுக்கு உள்ள உரிமைகள் குழுவில் உள்ள மற்றவர்களுக்கும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஊராட்சி மட்டத்தில் உருவாக்கப்பட்ட குழுவின் (Task Force) பணிகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய

ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர்- வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டப் பயனாளிகளை தேர்ந்தெடுப்பதாகும். ஆனால், தற்பொழுது 1991 ஆம் ஆண்டைய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நெறி நூலில் கொடுக்கப்பட்ட விதிமுறையின்படி, பயனாளிகள் கிராம சபையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

முற்பகல் 10-55

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமச் சங்கங்கள் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக எங்கள் பகுதிகளில் எல்லாம் தெரியவில்லை. அப்படி எல்லா இடங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது சில இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சில இடங்களில் இல்லாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம சபை என்ற அமைப்பு இன்றைக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கிராம சபையினுடைய பரிந்துரைகளின் பேரிலேதான் இன்றைக்கு இந்தப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே 'டாஸ்க் போர்ஸ்' என்ற அமைப்பு இருந்தது என்று சொன்னேன். அந்த 'டாஸ்க் போர்ஸ்'-லே சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற கிராம சபையிலே, அந்தந்த கிராமங்களிலே ஊரகத் திட்டப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு உள்ளூர் மக்கள், வங்கி அதிகாரிகள் மற்றும் வட்டார அலுவலர்கள் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அந்தக் கிராம சபை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *38*, திரு. கோ. காளன், இருக்கையில் இல்லை.

வினா எண் *39*, திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.